# 4. எமது அன்பு ஆசிரியர்கள்



வாருங்கள், நாம் நமது ஆசிரியருக்கு வெற்றிலை கொடுத்து வணக்கம் சொல்லுவோம்.

ஆசிரியை : நீர் அருளுக்கு அடித்தீரல்லவா? மன்னிப்புக் கேளும்.

நிமல் : அருள், மன்னித்துக் கொள்ளும்.



ஆசிரியை : கவிதா நீங்கள் இன்று பென்சில் கொண்டுவரவில்லையா?

கவிதா : இல்லை டீச்சர்.

ஆசிரியை : கவிதாவுக்கு யாராவது ஒரு பென்சில் கொடுங்கள்.

மலர் : நான் கொடுக்கிறேன் டீச்சர்.

எமக்கு நல்வழி காட்டும் ஆசிரியர்களைத் தந்த இறை தந்தைக்கு நன்றி கூறுவோம்.